# உங்களையே நீங்கள் மறந்து விடுங்கள் (4:8-14)

*நமது முந்திய பாடத்தில், "சாத்தான் உங்களுக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது" என்ற தலைப்பில் நாம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தோம். வசனங்கள் 1 முதல் 7 வரையில் நாம் பின்வரும் ஆலோசனைகளைக் கண்டோம்: (1) வியப்படைய வேண்டாம், (2) உங்கள் கரங்களைத் தூக்கி யெறிந்துவிட வேண்டாம், (3) சாத்தானின் சட்டங்களின்படி செயல்பட வேண்டாம். வசனங்கள் 8 முதல் 14 வரையில் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பேதுருவின் தற்காப்பு வாதத்தை நாம் காண்கிறோம். பேதுருவின் வார்த்தைகளில் ஒரு கொள்கை மிளிர்கின்றது: பேதுரு தம்மைக் காட்டிலும் கிறிஸ்து வின் மேலும் நற்செய்தியின் மேலும் அதிக அக்கறையுடன் இருந்தார்.*

## ஆவி

பேதுரு தமது தற்காப்பு வாதத்தைத் தொடங்கியபோது, அவர் "பரிசுத்த ஆவியினாலே நிறையப்பட்டார்" (வ. 8அ). இயேசு, தமது சீஷர்கள் சிறையிலிடப்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்தபோது, "ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" என்று கூறியிருந்தார் (லூக். 21:14, 15).[1] பேதுரு அந்த இரவைச் சிறையில்[2] எவ்விதம் செலவிட்டார் என்று நான் அறியவில்லை, ஆனால் அவர் அந்த இரவைத் தமது தற்காப்பு வாதத்தைத் தயாரிப்பதில் செலவிட்டிருக்க மாட்டார் என்று நான் அறிகிறேன். "பரிசுத்த ஆவியினால் நிறைந்து" என்றால் அவர் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டின் கீழே

இருந்தார் என்று பொருள்படும். இயேசுவின் ஆவி[3] அவர் மூலமாய் சனதெரீன் சங்கத்தாரிடம் பேசியிருக்க வேண்டும்.

## தர்க்க மூலம்

ஆலோசனைச் சங்கத்தாரால் கேட்கப்பட்ட கேள்வி ("நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள்?") தெளிவற்றதாய் இருந்திருக்கலாம், ஆனால் பேதுருவின் நோக்கங்களுக்கு இது மிகச் சரியாகப் பொருந்தியது, ஏனெனில் இக்கேள்வி அவர் தர்க்க மூலத்தை எடுத்துக் கொள்ள அவரை அனுமதித்தது. ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, அவர், "இதை" என்பது குணமாக்குதலைக் குறித்தது என்று பொருள் விளங்கிக்கொண்டார். "ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே" என்று அவர் தொடங்கி, "... பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச்[4] செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக் கேட்டால் ..." (வ. 8ஆ, 9) என்று தொடர்ந்தார். பேதுரு "இந்த மனுஷன்'' என்றபோது, அநேகமாக அவர்களுக்கருகில் நின்றிருந்த அந்த மனிதனின் தோள்களின் மேல் தமது கையைப் போட்டிருப்பார் (வ. 14). சூழ்நிலை சற்றும் பொருந்தாததாக இருந்தது! பேதுரு அதை அறிந்தார். ஆலோசனைச் சங்கத்தாரும் அதை அறிந்தனர்.

## மீட்பர்

அப்போஸ்தலர்கள், "இந்த மனிதனைக் குணப்படுத்தியது யார் என்று உண்மையிலேயே நீங்கள் அறிய ஆர்வமாயிருந்தால், நான் அதை உங்களுக்குக் கூறுவேன்'' என்ற விளைவை ஏற்படுத்தும்படிக் கூறினார். அவர்கள், ''எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள்?" என்று கேட்டிருந்தனர். அந்த மனிதன் இயேசுவின் நாமத்தினாலே குணப்படுத்தப்பட்டதாகப் பேதுரு அறிவித்தார்:

> உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லா ருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும்[5] தெரிந்திருக்கக் கடவது (வ. 10).

பேதுரு தமது சொந்த வாழ்க்கையைக் குறித்து கவலைப்படவில்லை. நீங்கள் உங்கள் சுய பாதுகாப்பைப்பற்றிக் கவலைப்பட்டால், நாட்டின் மிக வல்லமைவாய்ந்த குழுவை நோக்கி உங்கள் விரலை நீட்டி, அவர்கள் மேசியாவைச் சிலுவையில் அறைந்ததாகக் குற்றம்சாட்ட மாட்டீர்கள்! பேதுரு எதைப்பற்றி அக்கறையாய் இருந்தார்? அவர் இயேசு வின் நாமத்தைப்பற்றி அக்கறையாயிருந்தார்!

சாத்தான் கடினமான நேரத்தைத் தரும்போது, நாம் இதை நமக்குள் நினைவில் வைக்க வேண்டும்: நமக்கு என்ன நடக்கிற தென்பது சிறிதளவே முக்கியத்துவமுள்ளதாகும், ஆனால் கர்த்தருடைய செயலுக்கு என்ன நடக்கிறதென்பது பெரிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்![6]

பேதுரு தைரியமாய், ‘‘தேவன் அவரை [இயேசுவை] மரித்தோரிலிருந்து எழுப்பினார்’’ என்று உறுதியாகக் கூறு வதைக் கவனியுங்கள். “இயேசுவை முன்னிட்டு, மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினால்” (வ. 2) என்ற பாகமே சதுசேயர்களைக் கலங்கச் செய்தது என்பதை நினைவில் வையுங்கள். பேதுரு, தர்க்கத்திற்குரிய மூலங்களைத் தவிர்க்க வில்லை-விசேஷமாக அவரது பேச்சைக் கேட்கத் தேவை யானவர்களிடம் அதை அவர் தவிர்க்கவில்லை.

## கல்

குற்றச்சாட்டுகளைப் பேதுரு முடிக்காதிருந்தார். “படிப் பறிவற்ற மற்றும் பயிற்சியற்ற’’ இந்த மீனவர் இப்பொழுது இறையியலாளர்களுக்கு வேத வசனத்தை மேற்கோள் காட்டும் துணிச்சலைப் பெற்றிருந்தார்: ‘‘வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்’’ (வ. 11). மேசியாவைப் பற்றிய ஆதிக் குறிப்புகளில் ஒன்றாகிய[7] சங்கீதம் 118:22ஐப் பேதுரு மேற் கோள் காட்டினார். அந்த தீர்க்கதரிசனத்துடன் “உங்களால்”

என்ற வார்த்தையைச் சேர்த்து அதன்மூலம் அந்த தீர்க்கதரி சனத்தை அவர்களுக்குரியதாக்கினார்: "வீடு கட்டுகிறவர் களாகிய உங்களால் புறக்கணிக்கப்பட்ட கல் இவரே." "வீடு கட்டுகிறவர்கள்" என்பது ஆணிகள் அடிப்பவரையோ அல்லது சிமெண்ட் கலவையை பரப்புகிறவரையோ குறிப்பதில்லை. இது கட்டிடம் கட்டும் வேலைக்குப் பொறுப்புள்ளவரான கட்டிடக் கலைஞர், ஒப்பந்தக்காரர், மேற்பார்வையாளர் அல்லது தலைமைப் பொறுப்பாளரைக் குறிக்கிறது. யூதக் கொள்கை களைக் கட்டி எழுப்புகிறவர்களை நோக்கிப் பேதுரு தமது விரலைச் சுட்டிக் காட்டினார். "தலைவர்களாகிய நீங்கள் மேசியாவைப் புறக்கணித்தீர்கள்" என்று அவர் கூறினார்!

மேசியாவைப்பற்றிய அவர்களுடைய தவறான கருத்துக் களால் அவர்கள் அவரைப் புறக்கணித்தனர்: மேசியா ஆடம்பரத்தோடும் ஆர்ப்பாட்டத்தோடும் வருவாரென்றும், பெரிய இராணுவத்தைத் தலைமையேற்று நடத்துவாரென்றும், ரோமானியர்களை நாட்டிலிருந்து துரத்துவாரென்றும் அவர்கள் எண்ணியிருந்தனர். அவர் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து, எருசலேம் நகரத்திலிருந்து ஆட்சி செய்வாரென் றும், பலஸ்தீன நாடு முழுவதும் ஆசீர்வாதங்கள் பெருக் கெடுக்கும் என்றும் அவர்கள் எண்ணினர். இயேசு வந்த போதோ அவர், அவர்களுடைய ஆராய்ச்சிக்கு எதிரான பண்புடையவராக, மேசியாவைப்பற்றிய அவர்களுடைய எண்ணங்களுக்கு மாறானவராக இருந்தார் - எனவே அவர்கள் அவரைப் புறக்கணித்தனர். அவர்கள் புறக்கணித்த அவரைத் தேவன் தமது தெய்வீக ஊழியத்தில் "மூலைக்குத் தலைக்கல்" ஆக்கினர்.

அந்நாட்களில் கட்டிடங்களுக்கு மூலைக் கல் என்பது மிகவும் முக்கியமான பாகமாயிருந்தது. அது கட்டிடத்தின் அத்தியா வசியத் தேவையாயிருந்தது. இது அஸ்திபாரத்தை நிறைவு செய்து எஞ்சியுள்ள கட்டுமானங்களுக்குத் தாங்குதலாகவும், இயக்குதலாகவும் இருந்தது.[8] யூதர்கள் மூலைக் கல்லுக்கு ஒரு இடத்தை விட்டு வைத்திருந்தனர் (அது மேசியாவாயிருப்பார் என்ற அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் இவ்விதம் செய்தனர்); ஆனால் இயேசு வந்தபோதோ, அவர் அவ்விடத் திற்குத் தகுதியாயிருக்கவில்லை! தப்பெண்ணங்கள் மற்றும்

*முன் தீர்மானிக்கப்பட்ட கருத்துக்கள் ஆகியவை சத்தியத்திற்கு மாபெரும் எதிரிகளாகும்!*

## இரட்சிப்பு

*பேதுரு தொடர்ச்சியான கருத்துக்களால் ஆலோசனைச் சங்கத்தைக் கடுமையாகத் தாக்கினார். கடைசியாக அவர்களை விழத்தள்ளும் அடியையும் வைத்தார்: "அவராலேயன்றி வேறோருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவும் இல்லை" (வ. 12). கிரேக்க மொழியில் இவ்விடத் தில் உள்ள வார்த்தை ஆங்கிலத்தில் விளக்கப்படவில்லை. வசனம் 12ல் உள்ள "இரட்சிப்பு" மற்றும் "இரட்சிக்கப்படுதல்" ஆகிய இரண்டு வார்த்தைகளும் வசனம் 9ல் உள்ள "ஆரோக்கிய மானான்" என்ற வார்த்தையும் ஒரே மூல வார்த்தையிலிருந்து பெறப்பட்டுள்ளன. அந்த பிச்சைக்காரனுக்கு சரீர சுகத்தை அளித்த இயேசு ஒருவரே மனித குலத்திற்கு ஆவிக்குரிய சுகத்தையும்[9] அளிக்க முடியும்!*

*"வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை?" இக்கூற்று குறுகிய மனப்பான்மையுள்ளதுபோலக் காணப்பட்டாலும் உண்மையானதாகும். இயேசு: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார் (யோவா. 14:6)![10] பேதுரு இந்தச் சிந்தனையை எதிரொலித்தார். அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், தாங்கள் ஆபிர காமின் வாரிசுகள் என்பதாலும், மோசேயின் நியாயப் பிரமாணம் தங்களிடத்தில் உண்டு என்பதாலும் தங்களை இரட்சிப்படைந்தவர்களாகக் கருதிக்கொண்டிருந்தனர். பேதுரு கூறியதன் சாரம் என்னவென்றால், "நீங்கள் ஆபிரகாம் அல்லது மோசேயின் மூலம் இரட்சிக்கப்பட முடியாது! நீங்கள் இயேசுவின் நாமத்தின் மூலமாக மட்டுமே இரட்சிக்கப்பட முடியும்!" என்பதே. இன்றைய மார்க்க உலகம், நீங்கள் நல்ல மனிதராக இருக்கின்ற வரை, நீங்கள் ஆயிரக்கணக்கான வேறுபட்ட வழிகளில் பரலோகத்திற்குச் செல்ல முடியும் என்று*

அறிவிக்கின்றது. பேதுரு மறுபடியும், ''இல்லை! நீங்கள் இயேசுவின் நாமத்தினால் மட்டுமே இரட்சிப்படைய முடியும்!'' என்று கூறினார். சத்தியமானது அதனுடைய இயல்பில் எப்பொழுதும் குறுகியதாகவே உள்ளது.[11]

''நாம்'' என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: ''நாம் இரட்சிக்கப்படும்படி." பேதுரு தம்மையும், யோவானையும், குணமாக்கப்பட்டிருந்த அந்த மனிதனையும், ஆலோசனைச் சங்கத்தாரையும், மற்றும் அங்கிருந்த யாவரையும் இவ்விடத் தில் தமது கைகளால் சுட்டிக்காட்டியிருக்கக் கூடும். "நம்மில் யாரும் - மீனவர்களோ, பிச்சைக்காரனோ, ஆசாரியரோ, மூப்பரோ, வேத பாரகரோ, நியாய சங்க அதிகாரியோ அல்லது வேறு எவருமோ - இரட்சிக்கப்படுவது இயேசு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே நடைபெறும்" என்று அவர் வலியுறுத்தினார்!

பேதுரு தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்த சமயத்தவர் யாவரும் இழந்துபோகப்பட்ட நிலையில் இருந்தனர் என்று கூறினார். மேலும் அந்தக் குழுவினருக்குத் தேவன் இன்னொரு வாய்ப்பைக் கொடுத்திருந்ததாகக் கூறினார். சப்பாணியான மனிதன் சரீர சுகம் பெற்றது போலவே, ஆலோசனைச் சங்கத்தார் ஆவிக்குரிய சுகம் பெறக்கூடும். இன்னமும் தாமதம் ஆகவில்லை; இயேசுவைப் புறக்கணித்ததும், சிலுவையிலறைந்ததும் மன்னிக்க முடியாத பாவம் அல்ல. அவரை, மேசியா என்று அவர்கள் ஏற்றுக் கொண்டால், இப்பொழுதும் அவர்கள் இரட்சிப்படைய முடியும்! தேவன் கிருபையுள்ள தேவனாக இருக்கிறார்.

## அமைதி

பேதுருவின் வார்த்தைகள் ஆலோசனைச் சங்கத்தாரைப் பேச்சற்றவர்களாக்கியது! "பேதுருவும் யோவானும் பேசுகிற உறுதியான நம்பிக்கையையும் ["தைரியத்தையும்", KJV; "துணிவு", NIV][12] அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப் பட்டனர்" (வ. 13அ). "படிப்பறியாதவர்கள் மற்றும் பேதைமை யுள்ளவர்கள்'' என்றால், அப்போஸ்தலர்கள் முறையான படிப்பெதுவும் (விசேஷமாக, போதகராகும் பயிற்சி எதுவும்)

*பெற்றிருக்கவில்லை, மற்றும் முறையான பதவி எதுவும் பெற்றிருக்கவில்லை.*[13] *அங்கீகரிக்கப்பட்ட மதரீதியாக வட்டா ரங்களில், பேதுருவும் யோவானும் ஒன்றுமில்லை! இவர்கள் எப்படி இவ்விதமான அதிகாரத்தோடும், மன உறுதியோடும் பேச முடிந்தது? கற்றறிந்த எழுபத்தி ஒரு மனிதர்கள் ஒன்றும் கூறவியலாதபடி செய்ய இவர்களால் எப்படி முடிந்தது? ஆலோசனை சங்கத்தாருக்கு பதில் வந்தது: "அவர்கள் இயேசு வுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்" (வ. 13ஆ). இதற்கு முன்னால் பேதுருவையும் யோவானையும்*[14] *அவர்கள் அறியவில்லை என்று இதற்குப் பொருளல்ல, அல்லது இம்மனிதர்கள் இயேசுவின் சீடர்கள் என்பதை ஆலோசனை சங்கத்தார் அப்போதுதான் முதன் முறையாக அறிந்தார்கள் என்றும் பொருள் அல்ல. மாறாக, ஆலோசனை சங்கத்தார், பேதுருவும் யோவானும் எப்படி இவ்விதம் தைரியம் மற்றும் தீர்மானத்துடன் பேச முடிகிறது என்பதைத் திடீரென உணர்ந்தனர். இந்த இரு மனிதர்களும் ''இயேசுவுடன் இருந்ததால்'' தான் இவ்விதம் பேச முடிந்தது! ஆலோசனை சங்கத்தார், "அவர்கள் இயேசுவுடன் இருந்தது அவர்களுக்கு என்ன செய்தது" என்பதைக் கண்டனர் (ஜீவனுள்ள வேதாக மம்). கடந்த நாட்களில் இயேசுவுடன் நடத்திய வார்த்தைப் போராட்டங்களின் வேதனையுள்ள நினைவுகள் ஆலோசனைச் சங்கத்தாரின் முகங்களில் தென்பட்டிருக்க வேண்டும். இயேசுவும் கல்லாதவராகவே இருந்தார் (யோவா. 7:15ஐக் கவனியுங்கள்), ஆயினும் அவர்கள் அவருடன் இறையியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு முறையும் தோல்வி யுற்றிருந்தனர்.*[15] *அந்தக் குழப்பமான சூழ்நிலைகள் யாவும் அவர்களைவிட்டுப் பின்சென்றன என்று அவர்கள் எண்ணி யிருந்தனர், ஆனால் இயேசு பெருகியிருந்தார் - ஒரு மனிதராக அல்ல, இயேசுவைப் போன்றே அவர்களை முடிச்சுகளில் கட்டக்கூடிய அநேகராக அவர் பெருகியிருந்தார்! இது அவர்களுக்கு எவ்வளவு சிறுமையாய் இருந்திருக்கும்!*

*சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது, விரைவிலேயே நாம் "இயேசுவுடன் இருக்கிறோமா, அல்லவா" என்பது வெளியாகிவிடும். நமது எண்ணங்கள் யாவும் சுய-மையமுள்ளதாய் இருந்தால், "தம்மையே வெறுமையாக்கி"*

பின்பு "மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்திய" (பிலி. 2:7, 8) இயேசுவின் ஆவி நமக்குள் இல்லையென்றாகிறது. நமது சிந்தனையில் பயம் நிறைந்ததென்றால், அவர், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவா. 14:1) என்று கூறியபோது அதில் இருந்த பொருளை நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்றாகிறது. பேதுருவையும் யோவானையும் போல நாம் ஆவியின் அற்புத வெளிப்பாட்டினால் "நிறையாமல்" இருக்கலாம்; ஆனால் தேவனுடைய ஆவியானவர் நமக்கு உதவி செய்ய நம்மோடு கூட இருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்,[16] அப்போஸ்தலர்களைப் போலவே நாமும் நம்மை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தால், நாமும் கூட, சாத்தானுடைய கடுமையான தாக்குதலை தைரியத்தோடும் நம்பிக்கையோடும் எதிர்த்து நிற்க முடியும் (யாக். 4:7).

பேதுரு தமது பேச்சை முடித்த போது, ஒரு வேதனையுள்ள இடைவெளி நிலவிற்று. "சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர் பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது" (வ. 14). ஒரு அற்புதம் நடந்திருந்தது என்பதை அவர்கள் அறிந்தனர் (வ. 16). "அவர்கள் ஒன்றும் கூற முடியாதபடி" அவர்களுக்கு முன்பாக ஆதாரம் ஒன்றிருந்தது (NIV).

"எதிர் பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது" என்ற உண்மையானது, உயிர்த்தெழுதல் என்ற உண்மைக்குப் பலமான சாட்சியமாகும். வசனம் 10ல் பேதுருவின் முக்கிய கருத்துக்களை மறுபடியும் பாருங்கள்: (1) ஆலோசனைச் சங்கத்தில் இருந்தவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்திருந்தனர்; (2) தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்தெழுப்பினார்; (3) உயிர்த்தெழுந்த இயேசுவே, அவர்களுக்கு முன் நின்று அந்த மனிதனைக் குணப்படுத்தியிருந்தார். இயேசுவைச் சிலுவையில் அறைந்ததில் தங்களுக்கிருந்த பங்கை, ஆலோசனைச் சங்கத்தார் மறுக்க முடியாதிருந்தது; அம்மனிதன் குணமாக்கப்பட்டிருந்ததையும் அவர்களால் மறுக்க முடியாது. ஆகையால், தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதையும் அவர்களால் மறுக்க முடியாது.

கிறிஸ்தவ இயக்கமானது இளமையானதாகவும், எதிர்ப்பைத் தாங்கக் கூடாததாகவும் இருந்தது. இதை அழிப்பதற்கு இதன் எதிரிகள், இயேசு மரித்தோரிலிருந்தெழுந் திருக்கவில்லை என்று மட்டுமே நிரூபிக்க வேண்டியிருந்தது. அவர்கள் இயேசுவின் சரீரத்தைக் கொண்டுவர வேண்டும் அல்லது அந்த சரீரத்திற்கு என்னவாயிற்று என்பதற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க விளக்கம் தர வேண்டும்.[17] இவ்விரண்டையும் அவர்களால் செய்ய முடியாதிருந்தது. இன்றும் சிலர் உயிர்த் தெழுதலை விலக்கி, விளக்கம் தர முயற்சி செய்கின்றனர். அதைச் செய்ய முடிந்திருந்தால், உயிர்த்தெழுதல் நடந்த இடத்தில், அது நடந்த நாளில் இருந்தே தேவபக்தியற்றவர் களால் அது செய்யப்பட்டிருக்கும்! எப்படியிருப்பினும் அவர்களால் அது முடியாமற் போயிற்று!

## முடிவுரை

வசனம் 8 முதல் 14 வரை உள்ள பேதுருவின் அறிக்கையில், தாம் கூறியவைகளிலும், தம்முடைய நடக்கைகளிலும் பேதுரு, கிறிஸ்துவை உயர்த்தினார். சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது பின்பற்ற, இதைக்காட்டிலும் சிறந்த முன்மாதிரி வேறொன்று இருப்பதாக நான் எண்ணவில்லை.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

மூலைக் கல்லான இயேசு புறக்கணிக்கப்பட்டதை, கட்டிடத்தின் மாதிரியில் சுமாராக ஒரு படம் வரைந்து அதன் மூலைக் கல் விடுபட்டது போன்ற விளக்கம் தரலாம். அந்த காலியிடம் சரியற்றதாயிருப்பது, மேசியாவைப்பற்றிய யூதர் களின் தவறான கருத்துக்களைச் சுட்டிக்காட்டும். சாதாரண உருவமுள்ள மூலைக் கல் ஒன்றை ஒரு புறம் வரையுங்கள். அந்தக் கல் இயேசுவைக் குறிக்கிறது. அந்தக் கல் அங்குள்ள இடைவெளியில் பொருந்தாமலிருப்பதைக் குறிப்பிடுங்கள். இவ்விதமாய் அது புறக்கணிக்கப்பட்டது. (இந்தக் கருத்தைப் பின்வரும் பழமொழியைக் கொண்டு விளக்கலாம்: "சதுரமான

*முளைக் குச்சியை வட்டமான துளைக்குள் பொருத்த முடியாது.” ஒரு மரத் துண்டில் வட்டமான துளையிடுங்கள். அவ்வட்டத் துளையின் விட்டத்தின் அளவுள்ள சதுர முளையொன்றைச் செய்யுங்கள். வட்டத்துளையானது மேசியாவைப்பற்றி யூதர்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்களையும், சதுர முளையானது இயேசுவையும் குறிக்கின்றது.)*

---

## குறிப்புகள்

*[1]லூக். 12:11, 12; மத். 10:17-20 ஆகியவற்றையும் காண்க. இது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமான வாக்குத்தத்தமாகும், எல்லா ஊழியர்களுக்குமானதல்ல. நீங்களும் நானும் “முன்னதாகவே ஆயத்தமாயிருக்க” வேண்டும். [2]பின்னாளில் பவுலும் சீலாவும் செய்தது போலவே, பேதுருவும் யோவானும் சிறையில் இரவைச் செலவிட்டிருக்கலாம்; ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடுதல் (16:25). [3]16:7ஐக் காணவும். இது பரிசுத்த ஆவியானவர் பேசும் இன்னொரு விதம் ஆகும். [4]NIVயில் ‘‘ஊனமுற்றவனுக்குக் காட்டப்பட்ட ஒரு இரக்கத்தின் செயல்’’ என்றுள்ளது. [5]அவர் கூறியதன் சாரம், “இவ்வுலகம் இதை அறியும்படி நான் விரும்புகிறேன்” என்பதாகும்! [6]நமது ஆர்வங்களும், இராஜ்யத்தின் ஆர்வங்களும் சில வேளைகளில் ஒன்றாகப் பிணைக்கப்படுகின்றன. நமக்கெதிரான தவறான குற்றச்சாட்டுகள் இயேசுவின் நாமத்தில் மோசமாகப் பிரதிபலித்தால் அன்றி, நமக்கு என்ன நேரிடும் என்பதுபற்றி நாம் அதிகமாகக் கவலைப்படக் கூடாது! [7]மாற். 12:10 இவ்வசனப் பகுதியை இயேசு தமக்கே பயன்படுத்திக் கொண்டார். மூல வசனப் பொருளில், புறக்கணிக்கப்பட்ட கல் என்பது இஸ்ரவேல் நாட்டை - அது மற்ற நாடுகளால் புறக்கணிக்கப்பட்டதை குறிப்பிட - குறிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அது தேவனால் பயன்படுத்தப்பட்டது. அநேக சந்தர்ப்பங்களில், இஸ்ரவேல் நாட்டார் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றவில்லை, ஆனால் அந்த நோக்கங்கள் கனிதரும்படி கொண்டு வரவேண்டியது மேசியாவுக்கு விடப்பட்டது. ஆகையால் முழுமையான பொருளில் பார்க்கையில், இவ்வசனப்பகுதி மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனமாக அங்கிகரிக்கப்படுகிறது. [8]இந்நாட்களில் நமக்குள்ளது போன்ற கருவிகளும், தொழில் நுட்பமும் அந்நாட்களில் அவர்களிடத்தில் இல்லை. இந்நாட்களில் நாம் கட்டிடம் கட்டும் வழிமுறைகளில், மூலையில் வைக்கப்படும் கல் (அல்லது செங்கல் அல்லது மரத்துண்டு) அந்நாட்களில் இருந்ததுபோல் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, எனவே இந்த விளக்கம் அந்நாட்களில் தந்த அதே செயல் விளைவை இன்று தர இயலாமல் போகலாம். ஆகையால், சில மொழிபெயர்ப்புக்களில் (NEB போன்றவைகளில்) “திறவுகோல் (முக்கிய) கல்” அல்லது அதே போன்ற வேறு சில வார்த்தைகள் இக்கருத்தை விளக்கப் பயன்படுத்தப்படுகின்றன. நம்மில் அநேகர், பாதை வளைவில் உள்ள திறவுகோல் கல் (மையக் கல்) இல்லாதிருந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பதை அறிவோம்! [9]பின்வரும் பிரசங்கக் குறிப்புகளில், நான், வேறு வழிகளில் இரட்சிக்கப்பட முடியும் என்று பொதுவாக நம்புகின்ற மார்க்க உலகிற்கு இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றேன். இருப்பினும், ரிச்சர்ட் ரோஜர்ஸ்,*

*இவ்வார்த்தைகள் சபைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது தகுதியானதென்று சுட்டிக் காட்டியுள்ளார் (ரிச்சர்ட் ரோஜர்ஸ், "முதல் எதிர்ப்பு", சன்செட் கிறிஸ்துவின் சபையில் பிரசங்கிக்கப்பட்ட பிரசங்கம்,* Lubbock, Texas, n.d*). நாம் எச்சரிக்கையாய் இருக்கவில்லையென்றால், இழந்து போனவர்களை மீட்பதற்குக் கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதற்குப் பதில், நமது திட்டங்களையும், மனித திறமைகளையும் சார்ந்து விடக்கூடும்!* [10]*தமிழ் மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு: வழி, சத்தியம், ஜீவன் என்ற வார்த்தைகளுக்கு முன்னால், ஆங்கிலத்தில்* The *என்ற* article *பயன்படுத்தப் பட்டுள்ளது. இது சாய்வெழுத்தில் குறித்து, முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது. இதே முக்கியத்துவம் கிரேக்க மொழியிலும் உள்ளதாக இந்தக்குறிப்பில் (ஆங்கிலத்தில்) உள்ளது. ஆனால்* The *என்ற சுட்டுச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் வார்த்தை எதுவும் இல்லை என்பதால் இதை இவ்விடத்தில் எழுதுவது அவசியமாகிறது.*

[11]*இரண்டும் இரண்டும் கூட்டப்பெற்றால் எப்பொழுதும் நான்குதான் வரும். அது எப்பொழுதும் ஐந்து என்று ஆகாது. இதே வகையில்தான் சத்தியத்தின் குறுகிய மனப்பான்மையும் உள்ளது!* [12]*சீஷர்கள் வெளியரங்கமாகப் பேசுவதைப்பற்றிய பண்பையே, தைரியம் என்னப்படுகிறது (9:27, 28; 13:46; 14:3; 18:26; 19:8; 26:26). ஆதி சபையின் வளர்ச்சிக்கான "இரகசிய" காரணிகளில் இதுவும் ஒன்றாகும்.* [13]*முறையான கல்விக்கு மதிப்பு உண்டு, ஆனால் தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு அறிவிப்பதற்கு பட்டங்கள் ஒருபோதும் அவசியமானவைகளா யிருந்ததில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டில், விசேஷமாக அதன் தென்பகுதியில் உள்ள கிறிஸ்துவின் சபைகள் சிறிதளவு பயிற்சி அல்லது அதுவும் கூட இல்லாத, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளால் கட்டியெழுப்பப்பட்டுள்ளன, ஆனால் இவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கப் பற்றியெறியும் ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர்.* [14]*யோவான், காய்பாவுக்கு அறிமுகமானவரா யிருந்தார் (யோவா. 18:15, 16).* [15]*மத். 21:23-27; 22:15-46ஐக் கவனியுங்கள். ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவை நடத்தின விதம்பற்றி இதற்கு முன்பே பேதுருவும் யோவானும் கண்டிருந்தனர். இப்பொழுது ஆலோசனை சங்கத்தார் தங்களை இயேசு நடத்தின விதத்தைக் கண்டனர்.* [16]*முந்திய இதழில் அப். 2:38க்கான குறிப்பில் காணவும்.* [17]*காவல்காரர்கள் தூங்கிக் கொண்டிருக்கையில் இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் களவாடிச் சென்றுவிட்டனர் என்ற மதியீனமான கதையை (மத். 28:11-15) ஆலோசனைச் சங்கத்தார் மறுபடியும் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். அக்கதை ஒரு வதந்தியாக நன்றாய்ப் பரவிற்று; ஆனால் ஆலோசனைச் சங்கத்தார் அதை ஒரு சட்டப்பூர்வமான ஆதாரமாக வைத்திருந்தால், பேதுரு "அவர்களை அவர்களின் சொந்தக் கழு மரங்களிலேயே தொங்கவிட்டிருப்பார்" (இ.வ. எஸ். 7:10) - ஏனெனில், காவல் காக்கிற சமயத்தில் காவலர்கள் தூங்கியிருந்தால், அவர்களுக்கு வெகுமதி கிடைத்திருக்காது, தண்டனையே கிடைத்திருக்கும் (இ.வ. 12:19; 16:27).*